**செய்தி வெளியீடு எண்: 104** **நாள்: 06.02.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

சென்னை 28,அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப்பயிற்சி மையத்தில் உள்ள நூலகத்தில் ஒரு பணியிடம் காலியாக உள்ளது. இப்பணியிடம் தினக்கூலி அடிப்படையில் (Skilled Assistant) நிரப்பப்பட உள்ளது. இதற்காக பின்வரும் தகுதி உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் ஏதேனும் பட்டப் படிப்புடன் B.LISc (or) M.LISc முடித்திருக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரர் நூலகத்தில் குறைந்நதது இரண்டு வருடங்களுக்கு மேல் பணிபுரிந்ததற்கான அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
3. நூல்களைக் கணிணியில் பதிவேற்றம் செய்வதற்கான போதிய கணினி அறிவு பெற்றவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி தகுதிகளுடன் அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப்பயிற்சி மையத்தில் உள்ள நூலகத்தில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் www.civilservicecoaching.com என்ற இவ்வலுவலக இணையதள முகவரியில் விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து , பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை “முதல்வர், அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப்பயிற்சி மையம், காஞ்சி வளாகம், எண்.163/1, P.S.குமாரசாமி ராஜா சாலை,சென்னை 28” என்ற முகவரிக்கு 16.02.2019 மாலை 5.45 மணிக்குள் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**